2003 மார்ச் 26]

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2003ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட வணிக வரி, விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகள் மற்றும் பத்திரப் பதிவு குறித்த குழுவின் பதிமூன்றாவது மற்றும் பதினான்காவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தக் கோரும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று (26-3-2003-இல்) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, "வரவு-செலவுத் திட்டத்தின் பொது விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட நாளான இன்று (26-3-2003 அன்று) பேரவை விதி 184(1)-ஐத் தளர்த்தி நிதி அலுவல்கள் எடுத்துக்கொள்வதற்கு முன்பு அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.